<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

அனுப்புநர்
திரு.தே.கிருஷ்ணமூர்த்தி, எம்.காம்.,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்
திருநெல்வேலி.

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:09.01.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி –அவசரக் கூட்டம் 07.01.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 07.01.2020 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 07ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**<u>பொருள் எண்– 1</u>**

இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் முற்றிலும் சேதமுற்ற சாலைகளை செப்பனிட **14வது மத்திய நிதிக்குழு மான்யம் ரூ.325.70 இலட்சம்** செலவில் மேற்க்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்கண்ட சாலைகளை செப்பனிடுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ ல் | அகலம் மீட்டரி ல் | மதிப்பீடு ரூ.லட்சத் தில் |
|---|---|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் அரசு குடியிருப்பு முதலாவது மற்றும் இரண்டாவது கிழமேல் குறுக்குத்தெருக்களில் தார்சாலை அமைத்தல். | 400.00 | 6.00 | 38.50/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் அரசு குடியிருப்பு மூன்றாவது மற்றும் நான்காவது கிழமேல் குறுக்குத்தெருக்களில் தார்சாலை அமைத்தல். | 400.00 | 6.50 | 39.40/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் அரசு குடியிருப்பு தெற்கு பகுதி முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தென்வடல் குறுக்குத்தெருக்களில் தார்சாலை அமைத்தல். | 500.00 | 5.00 | 38.90/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் அரசு குடியிருப்பு வடக்கு பகுதி முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தென்வடல் குறுக்குத்தெருக்களில் தார்சாலை அமைத்தல். | 500.00 | 5.50 | 39.60/– |
| 5. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.22 இந்திராநகர் புதுக்காலனி மகமூதா நகர்ப்பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 600.00 | 4.00 | 38.20/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.22 இந்திராநகர் புதுக்காலணியில் உள்ள விரிவாக்கப்பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 620.00 | 4.00 | 39.60/– |
| 7. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 5,6,7,8மற்றும் 9வது தெரு மேற்குப்பகுதியில் பேவர்கல் தளம் தார்சாலை அமைத்தல். | 800.00 | 3.50 | 33.20/– |
| 8. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.27 கரியமாணிக்க பெருமாள் கோவில் தெருவில் தார்சாலை அமைத்தல். | 325.00 | 7.00 | 27.00/– |
| 9. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.5 கிருஷ்ணன்கோவில் வடக்குத்தெரு, வார்டு எண்.25 வடக்கத்தியம்மன் கோவில் தெரு கிழக்குப்பகுதி, மற்றும் வார்டு எண்.4 பூந்தோட்டம் வடக்குத்தெரு மற்றும் செவல்விளை 3ம் தெரு ஆகிய தெருக்களில் பேவர்கல் தளம் அமைத்தல். | 750.00 | 3.50 | 31.30/– |
| | மொத்தம் | 4895.00 | | 325.70 |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி **14வது மத்திய நிதிக்குழு மான்யம் 2019–2020ன் கீழ் விடுவிக்கப்படும் மான்யத்தொகை ரூ.325.70 இலட்சம்** செலவில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.73/2020/இ1)**

**தீர்மான எண்.1**

அனுமதிக்கப்பட்டது.

(ஓம்)தே.கிருஷ்ண மூர்த்தி,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.